RBI / 2006-06 / 92

AP(DIR series) சுற்றறிக்கை எண் 4 ஜுலை 28, 2006

வகை I – அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் (வங்கிகள்)

அன்புடையீர்,

**தவிர்க்கப்பட்ட பகுதிகள் மீதா வணிக நடவடிக்கைகளுக்கு அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் கொடுக்கும் துணைப் பிணையங்கள் – நிர்வகிப்பு**

2004 ஜுலை 7 அரசு அறிவிப்பு FEMA 120/RB.2004 அந்நியச்செலவாணி நிர்வாகம் (அந்நியப்பத்திரங்கள் வழங்குதல் அல்லது மாற்றம்) ஒழுங்குமுறைகள் 2004ஐ அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் வகை I வங்கிகளின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

2. அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள், AAA தரம் நிர்ணயிக்கப்பட்ட அயல்நாட்டு அரசுப் பத்திரங்களை, இந்தியப் பங்குச் சந்தையில் தருவிக்கப்பட்ட பகுதிகள் மீதான் தங்கள் வணிக நடவடிக்கைகளுக்குத் துணைப் பிணையமாகக் கொடுக்கலாம் என்று மத்திய அரசையும் இந்தியப் பத்திரபங்குப் பரிவர்த்தனை குழுமத்தையும் கலந்து ஆலோசித்து முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான நடைமுறைச்செயல் பாடுகள் மீதான வழிகாட்டுதல்களை இந்தியப் பத்திரபங்குப் பரிவர்த்தனை குழுமம் தனியாக அனுப்பி வைக்கும். அதன் பின்னர், 1999 அந்நியச்செலவாணி நிர்வாகச் சட்டத்தின் படி அங்கீகரிக்கப்பட்ட பங்குச் சந்தைகள் ரிசர்வ் வங்கியின் மத்திய அலுவலக அந்நியச்செலவாணித் துறையை குறிப்பிட்ட ஒப்புதல்களுக்காக அணுப்பலாம்.

3. 2000 அந்நியச்செலவாணி நிர்வாகம் (இதியாவுக்கு வெளியே குடியிருக்கும் ஒருவரால் பங்குப்பத்திரங்கள் வழங்குதல்) ஒழுங்கு மற்றும் 2000 மே 3 தேதியிட்ட வெளியீடு FEMA.20/2000-RB களில் தேவையான் திருத்தங்கள் பின்னர் வெளியிட்டப்படும்.

4. அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் – வங்கிகள் இச்சுற்றறிக்கையை தங்கள் கிளைகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் தெரியபடுத்த வேண்டும்.

5. வேறு ஏதேனும் சட்டத்தில் செல்லப்பட்டுள்ள அனுமதிகள் / ஒப்புதல்களை மீறாத வகையில், 1999 அந்நியச் செலவாணி நிர்வாகச்சட்டம் (1999ல் 42)பிரிவு 10(4) மற்றும் 11(i) கீழ் இச்சுற்றறிக்கையில் சொல்லப் பட்டுள்ள ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

நம்பிக்கையுள்ள

சலீம் கங்காதரன்
தலமை பொது மேலாளர்